கம்யூனிஸ்ட் கட்சி மாநாடு

▶ கோவை வரதராஜபுரத்தில் இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கோவை மாவட்ட 24வது மாநாடு நேற்று துவங்கியது. இதில் மத்தியக்குழு உறுப்பினர் வாசுகி பேசினார்.

கோவை, டிச.23: மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது கோவை மாவட்ட மாநாடு கோவை வரதராஜபுரம் பகுதியில் உள்ள மண்டபத்தில் நேற்று துவங்கியது. மாநாட்டின் துவக்க நிகழ்வாக கோவையின் வரலாற்றை விளக்கும் வகையில் புகைப்பட கண்காட்சி திறப்பு விழா நடைபெற்றது. இதனை அக்கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் என்.குணசேகரன் திறந்து வைத்தார். பின்னர் பல்வேறு பகுதிகளில் இருந்து எடுத்து வரப்பட்ட நினைவு ஜோதிகளை அக்கட்சி நிர்வாகிகள் பெற்றுக் கொண்டனர். மாநாட்டில் கட்சி கொடியினை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பி.ஆர்.நடராஜன் ஏற்றினார். இதையடுத்து எஸ்.கிருஷ்ணமூர்த்தி, வி.ஆர்.பழனிச்சாமி, டி.சுதா ஆகியோர் தலைமையில் நடைபெற்ற மாநாட்டில், அக்கட்சியின் மத்திய குழு உறுப்பினர் உ.வாசுகி துவக்க உரையாற்றினார்.

அவர் கூறியதாவது: இந்தியாவில் மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்துள்ள பாஜ தனது சொந்த காலில் நிற்க முடியாமல், பிற கூட்டணி கட்சிகளை சார்ந்துதான் ஆட்சியமைக்க முடியும் என்ற நிலை வந்துள்ளது. பாஜ அரசு கார்பரேட் ஆதரவு மற்றும் வகுப்புவாத கொள்கையை கடைபிடிக்கும் அரசாக உள்ளது. பல இடங்களில் சிறுபான்மையின மக்கள் குறிவைத்து தாக்கப்படுகிறார்கள். ஒரே நாடு, ஒரே தேர்தல் என்பது ஜனநாயக விரோதமானது. மாநில உரிமைகளுக்கு எதிரானது. டங்ஸ்டன் சுரங்கம் அமைக்கக்கூடாது என தமிழ்நாடு அரசு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருப்பது வரவேற்கத்தக்கது. பாசிசத்திற்கும், பாயசத்திற்குமே வித்தியாசம் தெரியாத தவெக தலைவர் விஜய், ஆட்சியை பிடித்தால் என்ன செய்வார் என நினைத்து பார்க்கவே பயமாக இருக்கிறது. ஒரு கம்பெனிக்கு வொர்க் பிரம் ஹோம் பண்ணலாம். அரசியலில் வொர்க் பிரம் ஹோம் பண்ண முடியாது. களத்திற்கு வந்து வேலை செய்யும் இயக்கமாக மார்க்சிஸ்ட் கட்சி இருக்கிறது. ஆனாலும் நமது சொந்த வாக்கு பலம் அதிகரிக்கவில்லை என்பது குறித்து நாம் விவாதிக்க வேண்டிய தேவை இருக்கிறது. சொந்த பலத்தை அதிகரிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். இதனை தொடர்ந்து நேற்று மாலை உழைப்பாளர் பேரணி மற்றும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

முதல்வரின் ஆராய்ச்சி உதவித்தொகை

வேளாண் பல்கலை மாணவர்கள் 4 பேர் வென்றனர்

கோவை, டிச. 23: தமிழக முதல்வரின் ஆராய்ச்சி உதவித்தொகை திட்டம் மூலம் தகுதி வாய்ந்த முதுகலை மாணவர்களுக்கு ஆராய்ச்சி தளத்தை வழங்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்பட்டு உள்ளது.

தமிழ்நாட்டின் மாநில பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசுக் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் இந்த உதவித் தொகையினை பெற முடியும். ஆசிரியர் ஆட்சேர்ப்பு வாரியத்தால் தகுதி தேர்வு நடத்தப்பட்டு, மாணவர்கள் திறமையின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுகின்றனர். இந்நிலையில், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தை சேர்ந்த 4 மாணவர்கள், 2023-24ம் ஆண்டிற்கான முதல்வரின் உதவித்தொகைகளை பெற்றுள்ளனர். அதன்படி, அறிவியல் பிரிவில், பிரியதர்ஷினி (சுற்றுச்சூழல் அறிவியல்), கார்த்திகா (வேளாண்மை வானிலையியல்), மோகனப்பிரியா (பயிர் நோயியல்) மற்றும் சமூக அறிவியல் பிரிவில் இளமதி (வேளாண்மைப் பொருளாதாரம்) ஆகியோர் உதவித்தொகையை பெற்றனர்.

இவர்களுக்கு சென்னையிலுள்ள கல்லூரிக் கல்வி இயக்குநரகத்தில் உயர்கல்வி அமைச்சர் கோவி செழியன் உதவித் தொகையை வழங்கினார். இந்த உதவித்தொகை மாதம் ரூ.25,000 வீதம் மூன்று வருட காலத்திற்கு வழங்கப்படுகிறது. முதுகலை மாணவர்களின் சாதனையை, பல்கலைக்கழக முதுகலை பட்ட மேற்படிப்பு பயிலக முதன்மையர் தே.சுரேஷ் குமார் வெகுவாக பாராட்டினார். வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி மாணவர்களைப் பாராட்டி ஊக்கப்படுத்தினார்.

ரத்தினம் பிஸியோதெரபி கல்லூரியின் 2ம் ஆண்டு விழா

கோவை, டிச.23: கோவை ரத்தினம் பிஸியோதெரபி கல்லூரி 'பிஸியோ பிலாஸ்ட் 2024' என்ற தலைப்பில் 2ம் ஆண்டு விழா ரத்தினம் அரங்கில் நடைபெற்றது. சென்னை சினெர்ஜி பிஸியோ கேர் அண்ட் ரிஆப் சென்டர் நிறுவனர் பேராசிரியர் டாக்டர் சுரேஷ் பிராங்க்ளின் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.

ஆண்டு விழாவில் அறிவியல், கலாசாரம், விளையாட்டு நடந்தது. இதில் மாணவர்கள் மூன்று குழுக்களாக பங்கேற்றனர். ள் நடத்தப்பட்டு பரிசு வழங்கப்பட்டது ரோலிங் கோப்பை ரபிரைனோஸ் அணி வென்றது. பெற்றனர். ஸ்பாஹியர் ஷார்க்ஸ் அணி 2ம் இடத்தைப் பெற்றனர். 2022 மற்றும் 2024ம் ஆண்டுக்கான சிறந்த மாணவர் விருதை மாணவி சோபிகா பெற்றார். 2023ம் ஆண்டுக்கான சிறந்த மாணவர் விருதை மாணவி கோகிலா பெற்றார். இதில் ரத்தினம் குழும இயக்குநர் ஷிமா செந்தில், ரத்தினம் குழும நிறுவனங்களின் சிஇஓ மற்றும் செயலாளர் டாக்டர். ஆர். மாணிக்கம், ஆர்சிபி முதல்வர் டாக்டர் எஸ். கார்த்திகேயன், ஆர்சிபி துணை முதல்வர் டாக்டர் ஆர்.ரோஷினி ஆகியோர் கலந்துகொண்டனர்.

சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் கிறிஸ்துமஸ் விழா

▶ தொண்டாமுத்தூர் சீயோன் தேவ சபையில் வடக்கு மாவட்ட திமுக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் கிறிஸ்துமஸ் மற்றும் ஆங்கில புத்தாண்டு நிகழ்ச்சி நடந்தது

திமுக மாவட்ட செயலாளர் பங்கேற்பு

தொண்டாமுத்தூர், டிச.23: கோவை வடக்கு மாவட்ட திமுக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் கிறிஸ்துமஸ் மற்றும் ஆங்கில புத்தாண்டு விழா தொண்டாமுத்தூர் சீயோன் தேவ சபையில் நடந்தது.

மாவட்ட திமுக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். மாவட்டம் சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாவட்ட அமைப்பாளர் உசேன் தலைமை தாங்கினார். மாவட்ட துணை அமைப்பாளர்கள் பிரான்சிஸ், மைக்கேல் ஆன்டனி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கிறிஸ்துமஸ் நற்செய்தியை சாமுவேல் வழங்கினார். மாவட்ட அமைப்பாளர் உசேன் தலைமையுரை ஆற்றினார். பேரூர் கழக செயலாளர் குமார் வரவேற்றார். மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி கேக் வெட்டி நிகழ்ச்சியை துவக்கி மாணவர்களுக்கு புத்தாடைகளை வழங்கினார்.

இந்நிகழ்வில், பேரூராட்சி தலைவர் கமலம் ரவி, சிறுபான்மையினர் அணி வடக்கு மாவட்ட நிர்வாகிகள் பிரான்சிஸ், மைகில் ஆண்டனி, பேரூராட்சி மன்ற உறுப்பினர் வனிதா நாகராஜ், துணை தலைவர் நடராஜன், முன்னாள் கவுன்சிலர் நாகராஜ், முன்னாள் துணை தலைவர் சேகர், கவுன்சிலர் லிதியா மூர்த்தி, கவுன்சிலர் சரண்யா தருன், கருணாகரன், கணேஷ் (எ) திருவேங்கடம், நிர்வாகிகள் பேரூர் கழக செயலாளர்கள், வட்ட செயலாளர்கள் இப்ராஹீம், இரா.மயில்சாமி, ஆதிதிராவிடர் நலகுழு அமைப்பாளர் தென்னை சிவா, தலைவர் வேலுச்சாமி, வர்த்தகர் அணி அமைப்பாளர் வேலுச்சாமி, ஆறுமுகம், கோவை சுலைமான், முசா, ராம்குமார், கதிர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கோவை வீரகேரளத்தில்

வெங்கடேஸ்வரா அவன்யூவில் சகல வசதியுடன் 95 வீடுகள்

கோவை, டிச.23: கோவை அருகே புதிதாக அமைக்கப்பட்ட வெங்கடேஸ்வரா அவன்யூவில் குறைந்த விலையில் தரமான வீடுகளுக்கான விறுவிறு புக்கிங் நடந்து வருகிறது.

கோவை வடவள்ளி பகுதி சேர்ந்த வெங்கடேஷ் வரா பில்டர்ஸ் நிறுவனம் கடந்த 20 ஆண்டுகளாக கோவை மாவட்டம் மற்றும் அதைச் சுற்றியுள்ள புறநகர் பகுதிகளில், தரமான வீட்டு மனைகள் மற்றும் மனை இடங்களை பொதுமக்களுக்கு வழங்கி வருகிறது. குறிப்பாக பொள்ளாச்சி, கிணத்துக்கடவு, காரமடை, வடவள்ளி, காருண்யா, தொண்டாமுத்தூர் உள்ளிட்ட இடங்களில் வீட்டுமனை இடங்கள் மற்றும் வீடுகள் குறைந்த விலையில், தரமான வகையில் பொதுமக்களுக்கு கட்டி கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட வீரகேரளம் அருகே புதிதாக வெங்கடேஸ்வரா அவன்யூ அமைக்கப்பட்டுள்ளது. மொத்தம் 5 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள இந்த அவன்யூவில் மொத்தம் 95 வீடுகள் கட்டும் வகையில், 95 சைட்டுகள் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய அவன்யூவில் 33 அடி ரோடு, சுற்றிலும் காம்பவுண்ட் வசதி, தண்ணீர் தொட்டி, சாக்கடை வசதி (பாதாள சாக்கடை வசதி), குழந்தைகளுக்கு பார்க் வசதி, 24 மணி நேர பாதுகாப்பு வசதி என பல்வேறு சிறப்பம்சங்களுடன், இந்த புதிய அவன்யூ அமைய உள்ளது.

▶ வீரகேரளம் அருகே புதிதாக உருவாக்கப்பட்ட வெங்கடேஸ்வரா அவன்யூவில் புதிய வீடு கட்டுவதற்கான பூமிபூஜை, வெங்கடேஸ்வரா பில்டர்ஸ் உரிமையாளர் மருதமலை சேனாதிபதி மற்றும் அமுதவல்லி சேனாதிபதி ஆகியோர் தலைமையில் நடந்தது.

இந்த வெங்கடேஸ்வரா அவன்யூவில், புதிய வீடு கட்டுவதற்கான பூமி பூஜை, வெங்கடேஸ்வரா பில்டர்ஸ் உரிமையாளர் மருதமலை சேனாதிபதி மற்றும் அமுதவல்லி சேனாதிபதி ஆகியோர் தலைமையில் நடந்தது. இதில், ஏராளமான வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டு மனை இடங்களை ஆர்வத்துடன் பார்வையிட்டு புக்கிங் செய்தனர். இதில், வெங்கடேஸ்வரா பில்டர்ஸ் அலுவலக ஊழியர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

விநாயகர் கோயிலில் மார்கழி பூஜை

▶ கோவை குனியமுத்தூர் வெற்றிலைக்காரவீதி விநாயகர் கோயிலில் மார்கழி மாதம் முழுவதும் அதிகாலையில் இலவச தேநீர் வழங்கும் திட்டத்தை மருளாளி வெள்ளிங்கிரி துவக்கி வைத்தார். அருகில் மதியழகன், சக்திவேல், மணிராஜ், பாலசுப்ரமணியம், ராமமூர்த்தி, வெள்ளிங்கிரி ஆண்டவர் அறக்கட்டளை தலைவர் ஆ.ராம்தாஸ் ஆகியோர் உடன் இருந்தனர்.

"கலைஞரின் கனவு இல்லம்" திட்டத்தின் கீழ்

1428 பயனாளிகளுக்கு வீடு கட்ட ஆணை

கலெக்டர் தகவல்

கோவை, டிச. 23: கோவை மாவட்டம், மதுக்கரை ஊராட்சி ஒன்றியத்திற்குப்பட்ட நாச்சிபாளையம் ஊராட்சியில், கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் கட்டப்பட்டு வரும் வீடுகளை 'நிறைந்தது மனம்' நிகழ்ச்சியின் கீழ் கலெக்டர் கிராந்திகுமார் பாடி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பயனாளியிடம் கலந்துரையாடினார். பின்னர் கலெக்டர் கூறியதாவது:

வீடு இல்லாத ஏழை, எளிய மக்கள் பாதுகாப்புடன் வசிக்க வேண்டும் என்பதற்காக தமிழ்நாடு அரசு சார்பில் இலவச வீடுகள் கட்டி வழங்கப்படுகிறது. "கலைஞரின் கனவு இல்லம்" திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 2024-25ம் ஆண்டில் ஒரு லட்சம் வீடுகள் கட்டி வழங்கப்படும் என்று முதல்வர் அறிவித்துள்ளார்.

அதன்படி, ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் 85 பயனாளிகளுக்கு ரூ.2.97 கோடி மதிப்பீட்டிலும், அன்னூர் ஊராட்சி ஒன்றியத்தில் 137 பயனாளிகளுக்கு 4.79 கோடி மதிப்பீட்டிலும், காரமடை ஊராட்சி ஒன்றியத்தில் 363 பயனாளிகளுக்கு 12.70 கோடி மதிப்பீட்டிலும் கட்ட ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மதுக்கரை ஊராட்சி ஒன்றியத்தில் 141 பயனாளிகளுக்கு 4.93 கோடி மதிப்பீட்டிலும், பெரியநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் 2 பயனாளிகளுக்கு 7 லட்சம் மதிப்பீட்டிலும், பொள்ளாச்சி வடக்கு ஊராட்சி ஒன்றியத்தில் 153 பயனாளிகளுக்கு 5.35 கோடி மதிப்பீட்டிலும், பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றியத்தில் 128 பயனாளிகளுக்கு ரூ.4.48 கோடி மதிப்பீட்டிலும் பயனாளிகள் ஆணை பெற்றுள்ளனர்.

எஸ்.எஸ். குளம் ஊராட்சி ஒன்றியத்தில் 37 பயனாளிகளுக்கு 1.30 கோடி மதிப்பீட்டிலும், சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் 106 பயனாளிகளுக்கு 3.71 கோடி மதிப்பீட்டிலும், சூலூர் ஊராட்சி ஒன்றியத்தில் 51 பயனாளிகளுக்கு 1.78 கோடி மதிப்பீட்டிலும், தொண்டாமுத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் 54 பயனாளிகளுக்கு 1.89 கோடி மதிப்பீட்டிலும் என மொத்தம் 1,428 பயனாளிகளுக்கு ரூ. 49.98 கோடி மதிப்பீட்டில் வீடுகள் கட்டுவதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 3 ஆண்டுகளில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.4.87 கோடி மதிப்பீட்டில் 39 பள்ளிகளில் அங்கன்வாடி மையங்கள் கட்டும் பணிகள் தொடங்கப்பட்டு, தற்போது வரை ரூ.4.60 கோடி மதிப்பீட்டில் 37 பள்ளிகளில் அங்கன்வாடி மையங்கள் கட்டப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. இவ்வாறு கலெக்டர் கிராந்திகுமார் பாடி தெரிவித்தார்.

மேற்கு புறவழிச்சாலை திட்டத்தில்

விவசாயிகள் பயன்பெறும் வகையில் சர்வீஸ் சாலை அமைத்து தர வேண்டும்

பேரூர் செட்டிப்பாளையம் ஊராட்சி தலைவர் கோரிக்கை

தொண்டாமுத்தூர், டிச.23: கோவை மாநகரில் போக்குவரத்து நெரிசலை குறைக்கவும் கேரளாவில் இருந்து காரமடை, மேட்டுப்பாளையம், ஊட்டி செல்வதற்காக வரும் சுற்றுலா பயணிகள் மற்றும் காய்கறிகள் வாங்கிச் செல்ல வரும் வியாபாரிகள், சரக்கு வாகனங்கள் மாநகருக்குள் புகுந்து செல்வதால் போக்குவரத்து நெரிசல் அதிகரித்து வருவதை தடுப்பதற்காக முதற்கட்டமாக தற்போது ரூ.250 கோடி மதிப்பீட்டில் மதுக்கரை மைல்கல் முதல் நரசிம்மநாயக்கன் பாளையம் வரை சுமார் 32.5 கி.மீ தூரத்துக்கு மேற்கு புறவழிச்சாலை அமைக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் பேரூர் செட்டிப்பாளையம் ஊராட்சி பகுதிக்குள் சுமார் 3 கி.மீ தொலைவிற்கு புதிதாக சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. புதிதாக அமைக்கப்படும் புறவழிச்சாலை ஏற்கனவே உள்ள உள்ளூர் சாலைகளை விட 10 முதல் 12 அடி உயரத்தில் அமைந்து வருகிறது. இதனால் இப்பகுதி விவசாயிகள் தங்களது விளைபொருட்களை சந்தைக்கு கொண்டு செல்வதில் சிரமம் இருந்து வருகிறது.

இது குறித்து பேரூர் செட்டிப்பாளையம் ஊராட்சி தலைவர் சாந்தி பிரசாத், கோட்டாட்சியரிடம் அளித்துள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது: மேற்கு புறவழிச்சாலை செல்லும் பாதையில் இருந்து எங்களது கிராம ஊராட்சி முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ளது. கிராம ஊராட்சியில் அதிகளவு விவசாயிகளே வசித்து வருகின்றனர். இவர்கள் சாகுபடி செய்யும் காய்கறிகளை சந்தைக்கு கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் கிராம மக்கள் தங்களது அன்றாட தேவைகளுக்கு அருகில் உள்ள கிராமங்களுக்கு செல்ல முடியாத நிலையில் மேற்கு புறவழிச்சாலை அமைகிறது. ஆறுமுக கவுண்டன் புதூரில் இருந்து ரேக்கின்டோ ரோடு சந்திப்பில் இணைப்பு சாலை அமைத்து கொடுக்க வேண்டும். புதிய புறவழிச் சாலையால் வழக்கமாக உள்ள கிராம சாலைகள் பாதிக்கக் கூடாது. விவசாயிகள் பொதுமக்கள் வசதிக்கேற்ப சர்வீஸ் சாலைகள் அமைத்து தர வேண்டும். பேரூர் செட்டிப்பாளையம் ஊராட்சியில் உள்ள குளங்கள், நீர் நிலைகளுக்கான நீர்வழித் தடம் பாதிக்காத வகையில், பள்ளவாரியில் நீர் சீராக செல்ல, தேவைக்கு ஏற்ப தரை மட்ட மற்றும் உயர் மட்ட பாலங்கள் அமைத்து தர உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு அவர் அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

ஓம்காரா அசட் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரை. லிட்.
OMKARA ASSETS RECONSTRUCTION PVT LTD.
CIN No U67100TZ2014PTC020363
பெரு நிறுவன அலுவலகம்: கோஹினூர் ஸ்கொயர், 47வது தளம், N.C. கேல்கர் மார்க், R.G. கட்காரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை – 400028.
மின்னஞ்சல்: karthi.govindasamy@omkaraarc.com, தொலைபேசி எண் : 044–24323033
அதிகாரப்பூர்வ அலுவலர் – மொபைல் எண். +91 9344684194 / +91 9884062068

[பிற்சேர்க்கை - IV-A]
[விதி 8 (6) உ/ப 9(1) விதியைப் பார்க்கவும்
அசையாச் சொத்தின் மின்-ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துகளை மறுசீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து அமலாக்கச் சட்டம் 2002 (''சர்ஃபாசி சட்டம்'') மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8 (6) உ/ப 9(1)-ன் விதிமுறையுடன் படிக்கவும்.

இதன் மூலம் பொது மக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) & அடமானதாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், இதன் கீழ் விவரிக்கப்பட்ட ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் / கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்ட அசையா சொத்து, ஓம்காரா அசட் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிட்டெட் (OARPL)-ன் அதிகாரப்பூர்வ அலுவலரால் சுவாதீனம் எடுக்கப்பட்டுள்ளது. மேலும், ஓம்காரா PS 22/2020-21 டிரஸ்ட்- ன் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படும் ஓம்காரா அசட் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிட்டெட் (OARPL) ஆனது, 26.02.2021 தேதியிட்ட பணி ஒப்படைப்பு ஒப்பந்தத்தின் கீழ் புல்லர்டன் இந்தியா கிரெடிட் கம்பெனி லிமிட்டெட் (பணி ஒப்படைப்பவர்) வசமிருந்து இதன் கீழ்க்கண்ட கடனீட்டுச் சொத்துகளுடன் சேர்த்து இதன் கீழ்க்கண்ட கணக்குகளில் உள்ள மொத்த நிலுவைத்தொகைகளையும் அடைந்துள்ளது. அதனால், OARPL ஆனது பணி ஒப்படைப்பவரின் நிலையினை பெற்று, நிலுவைத்தொகைகளை வசூலிக்கவும், கடனீட்டுச் சொத்துகளை உடைமை கொள்ளும் அதிகாரம் பெற்றுள்ளது. OARPL ன் அதிகாரப்பூர்வ அலுவலர் நிலுவைத்தொகைகளை வசூலிப்பதற்காக, இதன் கீழ்க்குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்துகளை விற்பனை செய்ய இதன் மூலம் உத்தேசித்துள்ளார். இதன் கீழே அந்தந்த இடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள கடனீடு பெற்று கடன் வழங்கிய OARPL-க்கு அந்தந்த கடன்தாரர் மற்றும் கூட்டு கடன்தாரர்(களிடமிருந்து) நிலுவையாக உள்ள தொகைகளை வசூலிப்பதற்காக, இதில் குறிப்பிடப்பட்டுள்ள சுவாதீனத்திலுள்ள சொத்துகள் சர்ஃபாசி சட்டம் 13(2) மற்றும் (4) ன் கீழான ஏற்பாடுகளின் கீழான அதிகாரத்தையும், உரிமைகளையும் பயன்படுத்தி "இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்றவற்றுடன்" மற்றும் "திருப்ப பெறத்தகாத வகையில்" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள், நிலுவைத்தொகைகளை, பிரிவு 13(2) ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு அனுப்பிய தேதி, அடிப்படை விலை, சுவாதீன தேதி விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை, டேவணித்தொகை, ஆய்வு தேதி மற்றும் நேரம் ஆகியன இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. வில்லங்க சான்றிதழில் உள்ளவாறு, வருமான வரித்துறை இந்த சொத்தை 31.10.2017 அன்று ரூ.1,14,23,555/-க்கு படிவம் ITCP-16ல் T.R.C.No. 29-35/C- 2/2017-18 இணைத்துள்ளது என்பதை அறியுமாறு ஏலதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

கடன்தாரர்(கள்)/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் பெயர் : திரு. K.தங்கவேல், த/பெ.காளியப்பன், திருமதி.T.கல்யாணி, க/பெ.திரு.K.தங்கவேல்.

கடனீட்டு சொத்தின் விவரங்கள்:திரு. K. தங்கவேலுக்குச் சொந்தமான சொத்து, 21.5.2009 தேதியிட்ட விற்பனைப் பத்திரம் 1793/2009 படி சார் பதிவு அலுவலகம், வடவள்ளி

கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், வடவள்ளி சார் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு தாலுகா, வடவள்ளி கிராமம், SF எண்.480 பகுதி, 480/2A, 481/1பகுதி, 481/2பகுதி, 488/B1 மொத்த நிலத்தின் ஒரு பகுதி புஞ்சை ஏக்கர் 4.25 , D.T.C.P.எண்.230/2002 தேதி 17.9.2002 – ல் அங்கீகரிக்கப்பட்ட வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டது. "ஜெயலட்சுமி நகர்" என்ற பெயரிலும் பாணியிலும், இந்த மனை எண்.29-ன் எல்லைகள் கீழ் வருமாறு: 30 அடி அகல கிழக்கு மேற்கு லேஅவுட் சாலைக்கு வடக்கு, மனை எண்.27 மற்றும் கடை மனைக்கு கிழக்கு , மனை எண்.28-க்கு தெற்கு, 23 அடி அகல தென்வடக்குச் சாலைக்கு மேற்கு, மேற்கூறிய கிழக்கு மேற்காக வடக்கில் 50 அடி, கிழக்கு மேற்காக தெற்கில் 45 அடி, வடக்கு தெற்காக கிழக்கில் 35 அடி, வடக்கு தெற்காக மேற்கில் 40 அடி, தென்கிழக்கு மூலையில் குறுக்கு 7 அடி அளவிட்டப்படுகிறது. 1988 சதுர அடி அல்லது 4 சென்ட்கள் 245 சதுர அடி அல்லது 184.69 சதுர மீட்டர்கள் நிலம், அதன்மீது R. C. C கட்டிடம் மாநூல் உரிமையுடன் லேஅவுட் சாலைகளில் கட்டப்பட்டுள்ளது. சொத்து SF எண்.481/1 (பகுதி) -ல் உள்ளது. இந்த சொத்து வடவள்ளி நகராட்சி எல்லைக்கு உட்பட்டது.

சொத்தின் உரிமையாளர்	திரு.K.தங்கவேல்
கோரிக்கை அறிவிப்பு தேதி	02.02.2022
அடையாள சுவாதீன தேதி	10.06.2022
நிர்ணய விலை	ரூ.105 லட்சம் (ரூ. ஒரு கோடியே ஐந்து லட்சம் மட்டும்)
முன் வைப்பு தொகை	Rs.10,50,000 (ரூ.பத்து லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)
ஏலம் அதிகரிப்பு தொகை	Rs.50,000 (ரூ. ஐம்பதாயிரம் மட்டும்)
சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்	அதிகாரபூர்வ அலுவலரை தொடர்பு கொள்ள வேண்டிய மொபைல் எண் 9344684194/9884062068
23.12.2024 அன்று நிலுவையில் உள்ள தொகைகள்	Rs.1,26,35,135 (ரூ. ஒரு கோடியே இருபத்தி ஆறு லட்சத்து முப்பத்தைந்தாயிரத்து நூற்றி முப்பத்தைந்து மட்டும்)
கணக்கு விவரங்கள்	கணக்கு எண் : 344905000929, பயனாளர் பெயர் : ஓம்காரா PS22/ 2020-21 ட்ரஸ்ட், வங்கி பெயர் : ICICI வங்கி, கிளை : பாந்த்ரா (கிழக்கு), மும்பை, IFSC குறியீடு : ICIC0003449
மின் ஏல தேதி & நேரம்	29 ஜனவரி 2025 காலை 11.00 முதல் மதியம் 12.00 –க்குள்
ஏல பங்கேற்பு கடிதம்/KYC ஆவணம்/EMD சான்று சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி மற்றும் நேரம்	27 ஜனவரி 2025 பிற்பகல் 4.00 மணிக்கு முன்.

ஏலத்தின் விதிமுறை மற்றும் நிபந்தனைகள்: விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடனீட்டு கடனீந்தோர் (OARPL) இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பைப் பார்க்கவும். அதாவது,i.e.http://omkaraarc.com/auction.php அல்லது சேவை வழங்குநரின் இணையதளம் அதாவது, https://www.bankeauctions.com
விதி 8(6) உ/ப 9(1)-ன் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002-ன் கீழ் விற்பனைக்கான சட்டப்பூர்வ அறிவிப்பு விதி 8(6) உ/ப 9(1), கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி, 2002 மற்றும் கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல் & நிதிச்சொத்துகளை மறுசீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து அமலாக்கச் சட்டம் 2002 –ன் கீழ் இந்த அறிவிப்பு மேலே உள்ள கடன் கணக்கின் கடன்தாரர்(கள்) 30 (முப்பது) நாட்களுக்கு குறையாத ஒரு கட்டாய அறிவிப்பாகும். சொத்துக்களை மீட்க அவர்கள் விரும்பினால், மேலே குறிப்பிட்டுள்ள நிலுவைத் தொகை மற்றும் 24.12.2024 மேல் வட்டி மற்றும் அனைத்து செலவுக் கட்டணங்கள் மற்றும் செலவுகளுடன் விற்பனை முடிவதற்கு முன்பு எந்த நேரத்திலும் செலுத்த வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.
பணம் செலுத்தத் தவறினால், அதிகாரப்பூர்வ அலுவலர் / கடனீட்டு கடனீந்தோர் விருப்பப்படி, கடனீட்டுச்சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி, 2002-ன் விதி 8 (5)-ன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட எந்த முறையிலும் சொத்து விற்கப்படும்.

கார்த்தி கோவிந்தசாமி
அதிகாரபூர்வ அலுவலர்,
மொபைல் எண்: 9344684194
தேதி: 23.12.2024
இடம்: சென்னை
ஓம்காரா அசட் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரை. லிட்.
(ஓம்காரா PS 22/2020-21 டிரஸ்ட்-ன் டிரஸ்டி ஆக செயல்படுகிறது)